THE MADURA-RAMNAD DIOCESAN MAGAZINE

SATHIAVARTHAMANI

October, 1954.

மதுரை-ராமநாதபுரம்

அத்தியட்சாதீனத் தீபிகை

சத்தியவர்த்தமானி

அக்டோபர், 1954

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

பத்திராதிபர் :— A. சாமுவேல் ஐயர், செமினரி, பசுமலை.

உதவி பத்திராதிபர்:— C. S. தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்.

மானேஜர் :— கனம் ஜாஷ்வா அவர்கள், மதுரை-ராமநாதபுரம்,
அத்தியட்சாதீன பொக்கிஷதார்,
211, தெற்கு மாரட் வீதி, மதுரை.

பத்திரிகைக் கமிற்றி :—

கனம் பிரடரிக் ஜேக்கப், மதுரை.
" தேவப்பிரகாசம் ஐயர், திண்டுக்கல்.
" தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்.
" ஜாஷ்வா, அத்தியட்சாதீன பொக்கிஷதார்.
" A. சாமுவேல் ஐயர், பசுமலை (தலைவர்.)

முக்கிய பொருளடக்கம்

1. அத்தியட்சரின் கடிதம் (கன்வென்ஷன்)
2. திருச்சபைச் செய்திகள்
3. சிறுவர் பாகம்
4. பிரசங்கக் குறிப்புகள்
5. இயேசுவின் ஜெபப்பள்ளி
6. பாப்புவா மிஷனரி கடிதம்
7. இரக்ஷணிய மனோகரம்
8. கி.மு. சங்கப்பொருட்கள்
9. வேத வினாக்களும், விடைகளும்
10. விளம்பரம்.

அத்தியட்சரின் கடிதம்

மேற்கு வேதசாஸ்திரக் கல்லூரி,
ஹாலண்டு, மிச்சிகன்,
23—9—54.

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள மக்களே :—

நானும் அம்மாளும் அமெரிக்காவில் செலவிடும் நாட்கள் கிட்டிவிட்டன. இன்னும் ஒருவாரத்தில் இந்தியா புறப்பட ஆயத்தமாயிருக்கிறோம். எங்களுக்கிருந்த ஆச்சரியமான அனுபவங்கள் முழுவதையும் இக்கடிதத்தின்மூலம் பகிர்ந்துகொள்ள இயலாது. நேரில் அவைகளைப்பற்றி உங்களிடம் சொல்லப்போதுமான அவகாசம் ஏற்படுமென நினைக்கிறேன். கடந்த வாரம் அமெரிக்கன் போர்டு கமிற்றிகளோடும் இதரக் கமிற்றிகளோடும் சபைத் தலைவர்களோடும் வெகுவாய்க் கலந்துகொள்ள முடிந்தது. அநேக ஆங்கிலேய சபைகளில் பிரசங்கிக்கவும், ஆங்கிலேய சபை குருக்களின் கூட்டங்களில் உபந்நியாசம் செய்யவும் நேரிட்டது. இந்த வாரம் ஆர்க்காட்டு மிஷன் தாய்ச் சபையான சீர்திருத்தச் சபையைச் சேர்ந்த வேதப்பாடசாலைகளைச் சந்திப்பேன். ஓய்வுநாளில் வாஷிங்டனில் பிரசங்கமும், சபைத் தலைவர்கள் சந்திப்பும் நடக்கும்.

எங்கு பார்த்தாலும் தென்னிந்திய திருச்சபைக்குப் பெரும் மதிப்பிருப்பதாகக் கண்டேன். கடைசி ஓய்வுநாளில் சர்வலோகத் திருச்சபை மகாநாட்டில் திருவிருந்தாராதனையை தென்னிந்திய திருச்சபை அதின் திருவிருந்தாராதனை முறைமையை உபயோகித்து நடத்தியது. இதை மகாநாட்டின் முக்கிய அம்சம் எனப் பிரதிநிதிகள் பலர் சிலாகித்துப் பேசினர். சபை ஐக்கியத்தில் நமக்கிருக்கும் அனுபவம் மகாநாட்டின் அலுவல்களுக்கு அனுசரணையாயிருந்தது. இப்படிப்பட்ட சபையின் பிரதிநிதியாயிருப்பது ஓர் பெரும் சிலாக்கியமே.

அதேசமயம் இந்தியாவின் தேசீய கொள்கைகளைப்பற்றிய தப்பபிப்பிராயம் உண்டெனக் கண்டேன். சமயம் வாய்க்கும் போதெல்லாம் அதை நிவர்த்திக்கப் பிரயாசப்படுவதை ஓர் சிலாக்கியமாகக் கருதுகிறேன். இந்த வருடம் சபைகள் இந்தியா, பாக்கிஸ்தான், இலங்கை முதலிய நாடுகளிலுள்ள மிஷன் வேலையைப்பற்றி முக்கியமாய் ஆராய்ச்சி செய்து வருகின்றன. இந்திய விஷயங்களைப்பற்றிய ஆற்றலும் அறிவும் அதிகம் உண்டு

நானும் அம்மாளும் அக்டோபர் 7ம் டி மதுரை வருவோம். உங்களனைவரையும் பார்க்கவும் எங்களுடைய கடந்த இரண்டுமாத அனுபவங்களை உங்களோடு பகிர்ந்துகொள்ளவும் ஆசிக்கிறோம். கடவுள் உங்களை ஆசீர்வதித்துக் காப்பாராக.

இப்படிக்கு,

கிறிஸ்துவுக்குள் உங்களன்புள்ள ஊழியன்,

லெஸ்லி நியூபிகின்,

அத்தியட்சர்.

அத்தியட்சரின் அலுவல்கள்

அக்டோபர்	11	டோக் அம்மையார் கல்லூரி, தியானக் கூட்டமும் நிர்வாகக் கமிற்றியும்.
	16	டோக் அம்மையார் கல்லூரி கவுன்சில்.
	17, 18	மானாமதுரை.
	23—26	கிறிஸ்தவ மாணவர் சங்கம், குற்றாலம்.
31—நவம்பர்	1	வத்தலக்குண்டு, நிலக்கோட்டை.
நவம்பர்	7	திருமங்கலம்

தென் இந்திய சபையைச் சேர்ந்த
மதுரை—இராமநாதபுரம் அத்தியட்சாதீனத்தின்
சத்திய வர்த்தமானி

புஸ்தகம் XV   பசுமலை, அக்டோபர் 1954   இலக்கம் 12

வருடசந்தா: 1 ரூ. தபாற்கூலி உட்பட.

மதுரை இராமநாதபுரம் அத்தியட்சாதீன வருடாந்திர கன்வென்ஷன்

மதுரை இராமநாதபுரம் அத்தியட்சாதீன ஆவிக்குரிய கூட்டங்களுக்காக விடுத்த விசேஷிதத அழைப்பும், சில குறிப்புகளும் :—

1954ம் ஆண்டு அக்டோபர் மாதம் 5ம் 6ம் 7ம் தேதிகளில், மதுரை, அமெரிக்கன் கல்லூரி சபா மண்டபத்தில், நமது அததியட்சாதீன ஆவிக்குரிய கூட்டங்கள் நடைபெறும். மேலும் இக்கூட்டஙகள் தொடாந்து 8ம் 9ம் தேதிகளிலும நடைபெறும். இத்தொடர்ச்சியான கூட்டங்களிலும் பங்கெடுக்க விரும்புவோர், இதில் கலந்துகொள்ளலாம். இககூட்டங்களுக்குத் தங்கள் தங்கள் வேதாகமங்களோடும, குறிப்பு நோட்டுப் புத்தகங்களுடனும் வரும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம். இககூட்டங்களுக்குரிய பாட்டுகளடங்கிய பிரதிகள், சபாமண்டபத்தில் விற்கப்படும்.

5ம் 6ம் 7ம் தேதிகளில் காலை 6 : 30 மணிக்கு, அமெரிக்கன் கல்லூரி ஆலயத்தில், கர்த்தருடைய திருவிருந்து ஆராதனை நடைபெறும்.

இக்கூட்டங்களுக்கு வருபவர்கள், தாங்கள் தங்குவதற்கான இடவசதிகளைக் குறித்து, அமெரிக்கன் கல்லூரி, ஜம்புரோ ஹாஸ்டல் வார்டன், கனம் P. T. செல்லப்பா அவர்களுக்கு எழுதி, ஏற்கனவே ஒழுங்கு செய்து கொள்ளும்படியும் சாப்பாட்டிற்குரிய ஒழுங்குகளைத் தாங்களே செய்து கொள்ளும்படியும் கேட்டுக்கொள்ளுகிறோம.

கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் காணிக்கை எடுக்கப்படும் பாப்புவா மிஷனுக்காகவும், அத்தியட்சாதீன மிஷன் சங்க ஊழியத்திற்காகவும், விசேஷித்த காணிக்கைகள் சேகரிக்கப்படும்.

இவ்வாவிக்குரிய கூட்டங்களை, சென்னை கனம் தானியேல் அவர்களும். அவரது குடும்பத்தாரும், நண்பர்களும் சேர்ந்து, நடத்தப்போகிறபடியால், அவைகள் நமது சபைகளுக்கு மிகவும் ஆசீர்வாதமாயிருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகையால் அத்தியட்சாதீனத்திலுள்ள

தலைவர்கள் யாவரும், திருச்சபையார்களும், இக்கூட்டங்களுக்கு வந்து, பங்குபெற்றுப்போகும்படி அன்புடன் அழைக்கிறோம் மேலும் திருச்சபையும், திருச்சபையிலுள்ள ஒவ்வொரு அங்கமும், தங்கள் ஜெபங்களில், இக்கூட்டங்களுக்காக ஜெபிக்கவும், அவைகளின் மூலமாய் மேலான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை, நாம் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, ஆண்டவரிடத்தில் பிரார்த்திக்கும்படியும் அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

கடவுள் தாமே இக்கூட்டங்களை, நம் யாவருக்கும் ஆசீர்வாதமாக்குவாராக!

உங்கள் வரவை அன்புடன் எதிர்பார்க்கும்,

Rev. பால்ராஜ் தாமஸ்
பிஷப் கமிஷரி

தேவராஜ் G. பால்
தலைவர்
கன்வென்ஷன் கமிட்டி

மதுரை
26—9—54

திருச்சபைச் செய்திகள்.

1. சபையின் திருநாட்கள்.

நவம்பர்
1. சகல பரிசுத்தவான்களின் திருநாள்.
2. சகல ஆத்துமாக்களின் திருநாள்.
7. திரி. திரு பின் ஞாயிறு 21.
ஓய்வுநாள் பாடசாலை ஞாயிறு.
14. திரி. திரு பின் ஞாயிறு 22.
21. ,, ,, 23.
28. அட்வெந்து ஞாயிறு 1.
30. பரி. அந்திரேயா திருநாள்.

2. பாப்புவா மிஷனுக்காக ஓர் வேண்டுகோள்.

பாப்புவா மிஷன் ஊழிய சம்பந்தமாக, ஒரு விசேஷித்த வேண்டுகோளை நமது தென் இந்திய சபையின் நிர்வாகக்கமிட்டி விடுத்திருக்கிறது. அதன் மூலம் வருஷத்திற்கு ரூ. 16,000/, பாப்புவாவில் செய்யப்படும் சுவிசேஷ ஊழியத்திற்கு அத்தியந்த தேவை என்று தெரியவருகிறது. தற்சமயம் அவ்விடத்தில் ஊழியம் செய்யும் Mrs. and Mr. சத்தியா ஜோசப் அவர்களின் தாபரிப்புக்காக ரூ. 800/- கையிருப்பு உள்ளது. இதிலிருந்து அவர்களுக்கு இரண்டு மாதங்களின் சம்பளம் கொடுக்க வேண்டியதிருக்கிறது. மேலும் அடுத்தபடியாக, இவ்வூழியத்திற்கென்று Mrs. and Mr. பால் மாணிக்கம் அவர்களை நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அவர்களுடைய சவரக்ஷணைக்கும் பணம் தேவை. நிர்வாகக்கமிட்டி, அத்தியட்சாதீனங்கள் யாவற்றையும், ஒரு திட்ட வட்ட

மான் தொகையை கொடுக்கும்படி கேட்டிருக்கிறார்கள். ஆதலால் நமது அத்தியட்சாதீனம் ரூ. 1200/- கொடுக்க வேண்டியிருக்கின்றது. இதற்கென்று, அக்டோபர் மாதம் நடைபெறும் ஆவிக்குரிய கூட்டங்கள் ஒன்றில், விசேஷித்த காணிக்கை சேகரிக்கப்படும். இதற்கிடையில், நமது அத்தியட்சாதீனத்திலுள்ள, சபைகளிலும், ஸ்தாபனங்களிலும், அங்கமாக உள்ளவர்களும், இந்த மிஷனரி ஊழியத்தில் ஆர்வமுள்ள தனிப்பட்ட தனவான்கள் யாவரும் தங்களால் இயன்ற, மனப்பூர்வமான, பண உதவியை, நமது அத்தியட்சாதீன பொக்கிஷதாருக்கு (கனம் ஜி. ஜி. ஜாஸ்வா, 211 தெற்கு மாரட் வீதி, மதுரை) அனுப்பிவைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த மிஷனரி ஊழியத்தில், யாவரும் பங்கெடுக்கும்படியும், இதன் வளர்ச்சிக்கென்று, விசேஷித்து ஜெபிக்கும்படியும் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன்.

பால்ராஜ் தாமஸ்,

பிஷப்ஸ் கமிஷரி.

3. நடுநிலைப் பள்ளிமாணவிகளின் முகாம்.

மதுரை, ராமநாதபுரம் அத்தியட்சாதீன நடுநிலைப் பள்ளி மாணவிகளின் முகாம் பாம்பனில் செப்டம்பர் 14ம் தேதி முதல் 16ம் தேதி முடிய நடைபெற்றது. இம் முகாமிற்கு இரட்சண்யபுரம், மானாமதுரை இராமநாதபுரம் இவ்விடங்களிலிருந்து கிறிஸ்தவப் பெண்கள் வந்திருந்தார்கள் கனம் D. M. சாமுவேல் ஐயரவர்கள் ஆவிக்குறிய கூட்டங்கள் நடத்தினார்கள். அவர் கிறிஸ்தவ ஜீவியத்திற்குறிய மூன்று அஸ்திபாரங்களாகிய கடமை, கீழ்ப்படிதல், இருதயச்சுத்தம் இவைகளைப்பற்றி படங்களுடன் அதிகத் தெளிவாக விளக்கிக்காட்டினார். சாயங்காலங்களில் கடற்கரைக்கு உலாவச் சென்றோம். அங்கே கடவுளுடைய மேன்மையை மேன்மேலும் உணர்ந்தோம். கடலிலும் அதிக உல்லாசமாகக் குளித்தோம். ஒரு நாள் அக்காள் மடத்திற்குச் சென்றோம் அங்கே Miss R. அழகுமணி "நானே நல்லமேய்ப்பன்" என்ற பொருள் பற்றி பேசினார்கள். அவர்கள் காலையில் எடுத்த தியானக் கூட்டங்கள் எங்களுக்கு அதிகப் பிரயோஜனமாயிருந்தன.

6 விதமான தண்களைப்பற்றியும், நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்ற பொருள் பர்றியும் தியானக் கூட்டங்கல் நடத்தினார்கள். கடைசி நாளில் Miss I. போஸன்கெட் அமமையாா ஒளியைபற்றி ஒரு சொற்பொழிவு ஆற்றி, பின் எல்லோரும் மெழுகுவர்த்தியைக கொளுத்தி எங்களையே தற்பிரதிஷ்டை செய்தோம். இம் முகாமை நாங்கள் மறக்கவே முடியாது எங்களுக்கு உண்ணை உணவும், ஆத்மா ஆகாரமும் கிடைத்தது என்று கனம் ரூத் ரோஸ்லிண்ட் அம்மையார் எழுதுகிறார்கள்.

சிறுவர் பாகம்

(கனம் தனமணி காபிரியேல் அம்மாள், மதுரை)

அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார். (மத்தேயு 6 : 4)

ஒரு ராஜாவைப் பார்க்க எல்லாருக்கும் எப்போதும் பிரியம் அல்லவா? நம்மில் அநேகர் ஒரு ராஜாவை நேரில் பார்த்திராவிட்டாலும் படத்தில் பல தேசத்து ராஜாக்களையும் பாாத்திருக்கிறோம். வேதத்திலும் அநேகம் ராஜாக்களைப்பற்றி வாசிக்கிறோம் அவர்கள எல்லாரையும் நீங்கள் வரிசையாய் எழுதி, அவர்களில் உங்களுக்குப் பிரியமான ராஜாக்கள் யார் யார் என்று பாருங்கள். ஏன்?

ஒரு தேசத்திலே ஒரு ராஜா இருந்தான். அவன் ரொம்பக் கோபமுள்ளவன். "நான் ஒரு ராஜா" என்ற பெருமை அவனுக்கு ஏற்பட்டது. தான் ராஜாவாயிருப்பதால் தன் அதிகாரத்தை எப்படியும் காட்டலாம் என்று எண்ணினான்.

ஒரு ராஜா என்றால் கடவுளின்மேல் பக்தியுள்ளவராயிருக்க வேண்டும். நீதி, இரக்கம் ராஜ இலட்சணம் அயல் தேசத்தாரோடு சிநேகமுடையவராய், சண்டை செயயாமல், சமாதானமாய் அரசு புரியவேண்டும். பிரஜைகளுக்கு நாலாவழிகளிலும் நன்மை செய்யவேண்டும்.

இந்த இராஜா அப்படி இல்லாமல் தனது இஷ்டம்போல் ஜனங்களை ஆள எண்ணினான். கோள் சொல்லுகிறவர்கள்மேல் இவனுக்கு ரொம்பப் பிரியம். இவனைப்பற்றி மற்றவர்கள் எப்போதும் புகழ்ச்சியாய்ப் பேச வேண்டும். மந்திரிமார் நல்லாலோசனை சொன்னால் ஏற்றுக்கொள்ள மாட்டான். தேசத்துக் குடிகள் தன்னைப்பற்றி எங்கேயாவது குறைகூறுகிறார்களா என்று அறிய அங்கங்கே ஆட்களை அமர்த்தியிருந்தான். அப்படிப் பேசுகிறவர்களைச சிறைச்சாலையில் அடைத்துவைப்பான். அவர்கள் நியாயஸ்தலத்தில் நியாயம் விசாரிக்கப்படுகையில் தாங்கள் குற்றம் ஒன்றும் செய்யாதிருக்கும்போது அநியாயமாய்ச் சிறையில் அடைத்த அந்த ராஜா தங்களுக்கு வேண்டாம் என்று சொல்லுவார்கள்.

இதை அறிந்த ராஜா, நீதி ஸ்தலத்தில் தன்னைப்பற்றிக் குறைவாய்ப் பேசப்படுகிறதா என்பதைத் தானே தன் காதினால் கேட்க விரும்பி அதற்காக ஒரு உபாயம் செய்தான். இரகசியமாகத் தனது அரண்மனையிலிருந்து நியாயஸ்தலத்திற்கு ஒரு சுரங்கம் கட்டினான். அந்தச் சுரங்கம் மனிதனுடைய காதைப்போலவே வடிவமுடையதாயிருந்தது. காதின் வெளிப்பாகத்தில் நியாயஸ்தலமும் அதன் உட்பாகத்தில் அரண்மனையும் இருந்தது. உலகத்திலேயே அப்படிப்பட்ட சுரங்கம் வேறே இருந்ததில்லை. சுரங்கத்தைப்பற்றிய இரகசியம் வேறொருவருக்கும் தெரியாமல் அந்தரங்கமாக இருக்கும்படியாக அதைக்கட்டின எல்லாரையும் ராஜா கொன்றுபோட்டான். சுரங்க வாசல் அருகில் தனது சிம்மாசனத்தைப் போட்டுத் தன் காதை அதற்கு நேராகத் திருப்பி, நியாயஸ்தலத்தில் தன்னைப்பற்றிப் பேசப்படுகிறவைகள் என்ன என்

பதை ஒற்றுக கேட்டு அப்படிப் பேசுகிறவர்களைத் தனக்கு முன் கொண்டுவரச்சொல்லி உடனே கொலை செய்வான். சுரங்கத்தைப்பற்றிய விஷயம் ஜனங்களுக்குத் தெரியாததால் ஒவ்வொரு இரகசியமும் ராஜாவுக்கு எப்படித் தெரிகிறது என்று ஆச்சரியப்பட்டு அதிகமாயப் பயந்தார்கள். கடவுள் தான் தங்களைக் காப்பாற்றவேண்டும் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள்.

வேதத்தில் இஸ்ரவேலரை அடிக்கடி அந்நிய ராஜாக்கள் ஆண்டுவந்தார்கள். அந்தக் காலங்களில் அவர்கள் கடவுளை உண்மையாய்த் தேடி கடவுளே வந்து தங்களுக்கு ராஜாவாயிருக்கவேண்டும் என்று ஜெபிப்பார்கள். இயேசு உலகத்தில் வந்த காலத்தில்கூட அவர்களை ரோம ராஜாக்கள் ஆண்டார்கள் அது அவர்களுக்கு அதிக வெறுப்பு.

இயேசு சுவாமி நம் எல்லாருக்கும் ஒரு ஜெபம் சொல்லிக்கொடுத்திருக்கிறார் :—

"உம்முடைய ராஜ்யம் வருவதாக ;
உம்முடைய சித்தம் பூமியிலேயும் செய்யப்படுவதாக ; ராஜியம், வல்லமை, என்றென்றைக்கும் உம்முடையவைகளே"

என்ற வார்த்தைகள் முக்கியமானவை நாம் தினந்தோறும், இடைவிடாமலும் மேலே சொன்ன ஜெபத்தைச் செய்துவந்தால் கடவுளின் ராஜியம் உலகத்திலே வந்துவிடும். இயேசு சுவாமி நமக்கு ராஜாவாக இருப்பார். அப்போதுதான் நமக்கு உண்மையான விடுதலை. அதுவரை கஷ்டம் நீங்காது.

மேலே சொன்ன அந்த ராஜா தன்னுடைய ஜனங்களுக்குத் தீமை செய்வதற்காக ஒரு சுரங்கத்தைக் கட்டினான்.
நமது இயேசு ராஜா,

"நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப்பூட்டி, அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு ; அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்" என்று சொல்லியிருக்கிறார். ஒரு இடத்தில் மாத்திரம் அல்ல, எந்த இடத்திலும் எந்த ஊரிலும், எந்த தேசததிலும், உலகமுழுவதும் எந்த நேரமாயிருந்தாலும்சரி, யாராயிருந்தாலும் பரவாயில்லை, அவரிடத்தில் நமது தேவைகளைச் சொல்லலாம். உடனே அந்தக் காரியம் நமது ராஜாவின் காதுக்கு எட்டிவிடும். நமது ராஜாவின் சுரங்கம் எவ்வளவு அதிசயமானது! தீமையைக் கவனித்து அதற்குத் தண்டனை கொடுக்கமாட்டார். அவர் ராஜாவாக இருந்தாலும் நம்மைக் கொல்லமாட்டார். அவர் ஒரு அன்புள்ள தகப்பனைப் போல இருக்கிறார். அவரிடத்தில் எவரும் போகலாம். சின்னப் பிள்ளைகள் தாராளமாய்ப் போகலாம். அவரிடம் ஒருவரும் கோள் சொல்லமுடியாது. அவரிடத்தில் உதவியைப் பெறுவதற்குச சிபார்சு அவசியமில்லை.

"கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்.
அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார் ; என்றைக்கும் கோபங் கொண்டிரார்.

அவர் நம்முடைய பாவங்களுக்குத் தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார் ".

பிரசங்கக் குறிப்புகள்

(உயிர் மீட்சி)

பொய்யன் யார்?

1. தேவனிடம் அன்பு கூருகிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைக்கிறவன் (1 யோ. 4 : 20).
2. தான் பாவஞ் செய்யவில்லையென்று சொல்லுகிறவன் (1 யோ. 1 :10).
3. தேவனை அறிந்திருக்கிறேன் என்று சொல்லியும் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் (1 யோ. 2 : 4).
4. இயேசுவைக் கிறிஸ்து என்று விசுவாசியாதவன் (யோ. 2 : 22).
5. தேவ ஐக்கியத்திலிருக்கிறேன் என்று சொல்லியும் இருளிலே நடக்கிறவன் (1 யோ. 1 : 6).
6. தேவ குமாரனைக் குறித்த சாட்சியை ஏற்றுக்கொள்ளாதவன் (1 யோ. 5 : 10).

தேவன் எத்தகையவர்?

சங். 65.

1. வாழ்த்துதலுக்குப் பாத்திரமுள்ள தேவன் (1)
2. வருவோரை ஏற்றுக்கொள்ளும் தேவன் (2)
3. வரமளிக்குந் தேவன் (3, 4, 9-13).
4. வாக்கில் உண்மையுள்ள தேவன் (5)
5. வல்லமையை வெளிப்படுத்தும் தேவன் (6-8).

முன்னானவைகளை நாடு

பிலி. 3 : 12-14.

I. பின்னானவைகளைப் பார்த்தல் (12)

- i அதிருப்தியை உண்டுபண்ணும் (4).
- ii மனத் தாழ்மையை கொடுக்கும் (8, 9)
- iii புதிய தீர்மானத்திற்கு ஏவும் (13).

II. முன்னானவைகளை பார்த்தல் (13, 14).

- i நோக்கமுடைமை. 'ஒன்று செய்கிறேன்.'
- ii பழைய அனுபவத்தால் பாடங்கற்றல் 'மறந்து'
- iii நோக்கத்தை நிறைவேற்ற விரைதல். 'தொடருகிறேன்.'

இயேசுவின் ஜெபப்பள்ளி

(குறிப்பு:—

இந்தப் பாடம் கொஞ்சம் கடினமானது ஆன்றால் திரும்பத் திரும்ப வாசித்துப் பார்த்தால் இதில் அடங்கிய ஆழ்ந்த கருத்துக்கள் விளங்கும்.)

பன்னிரண்டாம் பாடம்

'தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்'

அல்லது

விசுவாசமுள்ள ஜெபத்தின் இரகசியம்.

'இயேசு அவர்களை நோக்கி தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள். எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப் படாமல் விசுவாசித்தால் அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

(மாற்கு 11 : 22-24)

முந்தின பாடத்தில் 'ஜெபத்திற்கு நிச்சயமாகப் பதில் உண்டு' என்று படித்தோம். இந்தத் தேவ வாக்கு ஒப்பில்லாதது. வேத முழுவதிலும் உள்ள அதிசயங்கள் எல்லாவற்றையும் விட இது மகா அதிசயமானது. நான் கேட்கிற எல்லாம் எனக்குக் கிடைக்கும் என்ற விசுவாசத்தை நான் எப்படி அடைவேன்? என்று பலர் எண்ணுகிறார்கள்.

இந்தப் பாடத்தில் இந்தக் கேள்விக்குத் தான் ஆண்டவர் பதில் சொல்லுகிறார் சீடருக்கு இந்த வாக்கை கொடுப்பதற்கு முன்னால், மற்றொரு வார்த்தையையும் ஆண்டவர் சொன்னார். ஜெபத்திற்குப் பதில் நிச்சயமாய்க் கிடைக்கும் என்று நம்புகிற விசுவாசம் எங்கே உண்டாகிறது? எப்படிப் பலமடைகிறது? என்று சுட்டிக் காட்டுகிறார். "தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்" என்பதே அவ்வார்த்தை. ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும் என்ற வாக்குத் தத்தத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள் என்பதற்கு முந்தி 'தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்' என்று கூறுகிறார். வாக்குத்தத்தம் செய்கிற ஆளில் நம்பிக்கை இருந்தால்தான், அவர் செய்கிற அந்த வாக்குத்தத்தத்தின் மேல் நாம் நம்பிக்கை வைப்போம். குடிக்கக் கூழ்கூட இல்லாத ஒருவன் உனக்குக் "குபேர வாழ்வு" தருவேன் என்று வாக்குப் பண்ணினால் அவனையும் அவன் வாக்கையும் யாரும் நம்பமாட்டார். ஆகையால் வாக்குப் பண்ணுகிற ஆளின் மேல் நம்பிக்கையிருந்தால்தான் அந்த ஆள் செய்யும் வாக்குத்தத்தத்தில் நம்பிக்கை ஏற்படும்.

நாம் கேட்பது எதுவாயினும் கொடுக்கிறார் என்பதை நம்பும் சக்தி, கடவுளோடு நாம் பிழைக்கும்போதும், அவரோடு ஐக்கியப் படும்போதுமே விருத்தியாகிறது 'எல்லாம் இயேசுவே எனக் கெல்லாம் இயேசுவே' என்று நம்பும்போதே அச் சக்தி விரியும். அவருடைய திருப்பிரசன்னத்தின் சுடரொளி, நமது இருதய தாமரை களில் படும்படியாக, நம் இருதயங்களை அந்த ஒளியின் செல்வாக்கி னுக்கு இடங்கொடுக்கும்போதுதான் அந்த ஒப்பற்ற சக்தி மலர்ந்து வாசம் தரும் விசுவாசமாவது என்ன என்று நாம் அறியும்போது தான், நாம் கடவுளில் வைக்கும் விசுவாசத்திற்கும், அவருடைய வாக்குத்தத்தத்தில் வைக்கும் விசுவாசத்திற்கும் உள்ள சம்பந்தம் தெளிவாகும்.

நமக்குக் கொடுக்கப்படுவதைக் கொள்ளும் கை அல்லது வாய்க்கு அது அடிக்கடி ஒப்பிடப்படுகிறது. ஆனால் வாக்குப் பண்ணப்பட்டதைக் கேட்கிற காதும்கூட விசுவாசம். கொடுக்கப் படுவதைக் காண்பதால் கண்ணும் விசுவாசமே, இதன்மேலேயே எடுக்கும் வல்லமையிருக்கிறது வாக்குச் செய்யும் ஆளின் தொனியை நாம் கேட்கவேண்டும். அவர் தொனி நம்புவதற் குதவுகிறது. அவரை நாம் பார்க்கவேண்டும். ஏனெனில் நாம் எடுத்துக்கொள்ளும் உரிமையைப் பற்றிய பயம் அவர் முகத்தாலும் அவர் கண்ணாலும் மறைகிறது. வாக்கின் மதிப்பு வாக்குச் செய் பவரைப் பொருத்தது. வாக்குச் செய்பவர் எப்படிப்பட்டவர் என்ற அறிவின்மீதே வாக்கின்மேலுள்ள விசுவாசம் வலுவடை கிறது.

இக் காரணம்பற்றியே ஜெபத்தைப்பற்றிய வாக்கைக் கொடுப் பதற்கு முன்னே 'கடவுளிடம் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்' என்று இயேசு கட்டளையிடுகிறார். அதாவது, உயிருள்ள தேவனுக்கு உங்கள் கண்களைத் திறவுங்கள், அரூபியான அவரைக் கண்குளிரக் காணுங்கள் என்கிறார். நமக்கு முன்னிருப்பதன் செல்வாக்கிற்கு நம் கண்கள் மூலமாகவே நம்மை ஒப்புக்கொடுக்கிறோம். நம் மன தில் அது இடம்பெற அனுமதிக்கிறோம் ஆகையால் கடவுளை நம்பு வது என்பது அவர் எப்படிப்பட்டவர் என்பதை உற்றுநோக்கு வதாகும். அவர் பிரசன்னத்தை வெளியிட இடங்கொடுப்பதும், அவருடைய சாயல் நம்மில் பதிய நம்மையே முற்றும் ஒப்புக்கொடுப் பதும், அவருடைய அன்பின் நிழலை அடைவதுமே நம்பிக்கை வைப் பது என்பதற்குப் பொருள். கடவுள் எப்படிப்பட்டவர்? என்ன செய்கிறார்? என்பதைக் கண்டு களிக்கும் மனக் கண்ணே விசுவாசம். விசுவாசத்தின் மூலம் அவரது திருப் பிரசன்னத்தின் ஒளியும், அவரது பலத்த வல்லமையின் செயல்களும் ஆன்மாவிற்குள் பாய் கின்றன. நான் காண்பது என்னில் நிலைப்பது எப்படியோ அப் படியே விசுவாசத்தின் மூலம் கடவுள் என்னிலும் இருக்கிறார்.

காதின் வாயிலாகக் கடவுளின் சத்தத்தை அடிக்கடி கேட்டு அவரோடு தொடர்பு வைத்துக்கொள்வதால் விசுவாசம் ஒரு காதும் ஆகும் பரிசுத்த ஆவியின் மூலமாகவே கடவுள் நம்மோடு பேசுகிறார். கடவுள் சொல்லுகிறவைகளின் சாரம் ஆகிய வார்த்தையே குமாரன் ஆவி உயிருள்ள தொனி. கடவுளின் பிள்ளையை நடத்தவும் அதற்கு வழிகாட்டவும் பரிசுத்தாவி தேவை. இயேசுவுக்கு என்ன செய்யவேண்டும்? என்ன சொல்லவேண்டும்? என்று அதே அந்தரங்க தொனி கடவுளுடைய பிள்ளைக்கும் வரவேண்டும். விசுவாசிக்கிற இருதயம் கடவுள்மீது காத்திருந்து அவர் சொல்வதை கேட்க நாம் செவி சாய்க்க வேண்டும். கடவுளின் திரு வார்த்தைகள் வேதாகமத்தின் சொற்களாய் மாத்திரம் அல்லாமல் அவருடைய திரு வாயிலிருந்து தோன்றும் ஆவியாகவும், சத்தியமாகவும், ஜீவனாகவும். வல்லமையாகவும் இருக்கும். அவை கருத்துக்களாய் மட்டும் இருக்கின்றவைகளைச் செயலிலும் ஜீவனுள்ள அனுபவங்களிலும் கொண்டுவரும். திறந்த காதின் மூலமே, கடவுளாலேயே வரும் வல்லமைக்கும் வாழ்க்கையின் செல்வாக்குக்கும கீழ் ஆத்துமா நிலைதிருக்கும் நாம் கேட்கும வார்த்தைகள் நமது உள்ளங்களில் பிரவேசித்துத் தங்கிக் கிரியை செய்வது எப்படியோ, அப்படியே விசுவாசத்தின் மூலம் கடவுள் மனிதர் இருதயங்களில் பிரவேசித்துத் தங்கிக் கிரியை நடப்பிக்கிறார்.

கடவுளைக் காண்கிற கண் போலவும், அவர் வார்த்தைகளைக் கேட்கிற காது போலவும், ஆத்துமாவின் தத்துவம் போலவும், விசுவாசமானது முழுச்செயலாற்றும் போதுதான், கடவுளின் ஆசிகளைப் பெறும் கை போல, விசுவாசம் தன் வல்லமைமுழுவதையும் பயன்படுத்தும். ஆத்மீகமானக் காட்சியை பொருத்தே பெற்றுக் கொள்ளும் வல்லமை இருக்கும். இது காரணம்பற்றியே, விசுவாசமுள்ள ஜெபத்திற்குக் கடவுள் பதில் அருள்வார் என்ற வாக்குத்தத்தத்தைக் கொடுப்பதற்கு முன், 'தேவனில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்' என்று இயேசுநாதர் கூறினார், ஒப்புக்கொடுத்தல் அல்லது சரணார்த்தியே விசுவாசம்.

உயிருள்ள தேவனுக்கு விசுவாசத்தினாலேயே நம்மை ஒப்புக் கொடுக்கிறோம் அவரது மகிமையும், அன்பும், நமது இருதயங்களில் நிரம்பி நமது வாழ்க்கையின் மேல் அவை ஆதிக்கம் செலுத்துகின்றன. விசுவாசம் தோழமையாகும் வாக்குப் பண்ணுகிற ஒரு தோழனின் செல்வாக்குக்கு நம்மை ஒப்புக்கொடுக்கிறோம் அவனது வாக்குத்தத்தின் காரணமாக அவனோடு இணைக்கப்படுகிறோம். அப்படியே கடவுளோடு நாம் உயிருள்ள தோழமை கொள்ளும்போதுதான் நமது விசுவாசம் எப்பொழுதும் அவரைப் பார்க்கிறது. அவரைக்

கேட்கிறது. அவரது திருவாக்கில் நம்பிக்கை கொள்கிறது. வாக்குப் பண்ணுகிறவரில் வைக்கும் விசுவாசத்தின் கனியே வாக்குத்தத்தத்தில் வைக்கும் விசுவாசத்தின் கனியாகும விசுவாசத்தின் ஜெபம விசுவாச ஜீவியத்தில் வேரூன்றி இருக்கிறது இவ்விதமாக, சக்தியுடன் ஜெபிக்கிற விசுவாசம் கடவுளின் ஒளியாகும் கடவுளுடைய பிள்ளைகளுள் பலர் விசுவாச ஜீவியத்திற்கும் விசுவாச ஜெபத்திற்கும் உள்ள தொடர்பை விளக்கிக் கொள்ளாதபடியினுல்தான், ஜெபத்தின் வல்லமையால் வரும் அனுபவங்கள் அவர்களுக்குக் குறைந்து போயின. கடவுளிடமிருந்து பதிலைப் பெற அவர்கள் உண்மையாய் விரும்பும்பொழுது, அவர்கள் கடவுளின் திருவாக்கின்மேல் மனதை நாட்டி, விசுவாசத்தினுல் அவ்வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொள்ளப் பெரிதும் முயல்கின்றனர். அவர்கள் வெற்றிபெருதபோது, அவர்கள் எதிர் பார்க்கும் நம்பிக்கையை இழக்கின்றனர். வாக்குத்தத்தம் உண்மைதான். ஆனுல் அதனை விசுவாசததினுல் பிடித்துக் கொள்வது அவர்கள் வல்லமைக்கு மிஞ்சியதாக இருக்கிறது. இன்று இயேசு கற்பிக்கும் பாடத்திற்குச் செவிகொடுங்கள். உயிருள்ள தேவனுகிய கடவுளிடத்தில் விசுவாசமுள்ளவர்களாக இருங்கள். வாக்குச் செய்யப்பட்டதைப் பார்க்கிலும் விசுவாசத்தினுல் கடவுளையே நோக்குங்கள். அவரது அன்பும், அவரது வல்லமையும், அவரது உயிருள்ள பிரசன்னமும் விசுவாசத்தைத் தூண்டிக் கிரியை நடப்பிக்கும. தன் கைகளால் பொருள்களைப் பிடிக்கவும், தூக்கவும் தக்க பலம்பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று ஒருவன் வைத்தியனைக் கேட்டால் அவன் முழு உடலுமே பலப்படுத்தப்பட வேண்டுமென்று சொல்லுவான். அப்படியே பலவீனமான விசுவாசத்திற்கு மருந்து கடவுளோடு ஐக்கியப்படுவதன் மூலமாக, முழு ஆத்மீக வாழ்க்கையையும் பலப்படுத்துவதேயாகும். கடவுளை நம்பக் கற்றுக்கொள்க. கடவுளைப் பற்றிக்கொள்ளப் பழகுக. உன் வாழ்க்கையை கடவுளுக்கே ஒப்பபடைப்புச் செய்க. அப்படிச் செய்தால் கடவுளின் வாககுத்தத்தத்தைப் பற்றிக்கொள்ளச் சுலபமாயிருக்கும் கடவுளை அறிகிறவனும், கடவுளை நம்புகிறவனும் அவரது வாக்குத்தத்தத்தில் இலேசில் நம்பிக்கை வைக்கிருன்.

பழைய பரிசுத்தவான்களின் சரித்திரங்களில் இது எப்படித் தெளிவாய் விளங்குகிறது என்பது கவனிக்கத்தக்கது. விசுவாசத்தின் விசேஷ வல்லமை வெளிப்பாடு, கடவுளின் விசேஷ வெளிப்படுத்துதலின் கனியாயிருந்தது. ஆபிரகாமைப் பாருங்கள். 'எகோவாவின் வார்த்தை ஆபிரகாமிற்கு உண்டாகி ஆபிராமே அஞ்சாதே நான் உனது கேடயம்' என்ருர். அவன் கர்த்தரை விசுவாசித்தான். அதன்பின் மறுபடியும் எகோவா அவனிடம் தோன்றி, நானே சர்வ வல்லமையுள்ள தேவன் என்ருர். ஆபிரகாம் சாஷ்டாங்கமாய்விழுந்து பணிந்தான். அப்பொழுது கர்த்தர் இதோ என் உடன்படிக்கை

உன்னோடு இருக்கிறது என்று அவனோடு பேசினார். கடவுள் தம்மை வெளிப்படுத்தினதே அவ்வாக்குத்தத்தத்தை அருளினது அதன் உயிருள்ள வல்லமை அவன் இருதயத்தில் பிரவேசித்தது. அவன் விசுவாசத்தைக் கிரியை செய்யும்படி தூண்டினது. அக்காலத்திய விசுவாச பக்தர்கள் கடவுளை அறிந்தபடியால் அவரது வாக்குத்தத்தத்தில்விசுவாசம் வைத்தார்கள். நாம் கடவுளை எவ்வளவு அறிவோமோ அவ்வளவே அவரது வாக்குத்தத்தமும் நமக்கு வரும். கடவுள் முன்னால் நடப்பவனும், முகங்குப்புற விழுந்து வணங்கி, உயிருள்ள கடவுளின் சத்தத்திற்குச் செவிகொடுப்பவனுமே அவரது வாக்குத்தத்தத்தை உண்மையாய்ப் பெற முடியும். கடவுளின் வாக்குத்தத்தங்கள் வேதாகமத்தில் இருந்தபோதிலும், அவ்வற்றை எடுத்துக் கொள்ள நமக்கு உரிமையிருந்த போதிலும், கடவுளே அவற்றை நமக்குப் பேசினாலொழிய நமது குறைவான ஆத்மீக வல்லமை இடையூறாய் நிற்கிறது. அவருடைய வழிகளில் நடந்து அவரோடு ஜீவிக்கிறவர்களுக்கே அவர் பேசுகிறார். ஆகையால் கடவுளிடத்தில் விசுவாசமுள்ளவர்களாக இருங்கள். விசுவாசம் கண்ணாகவும் காதாகவும் இருப்பதாக.

வேத வினாக்களுக்கு விடை

1. பெத்லகேம்
2. நாத்தான் தாவீதைப் பார்த்துச் சொன்னது II சாமு. 12 : 7
3. நெகேமியாவின் புஸ்தகம்
4. பஸ்கா— யாத். 12 : 22—இயேசு சிலுவையில் அறையப்பட்ட சமயம்—யோவான் 19 : 29
5. தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்—ஏசாயா 55 : 1
6. யாக்கோபு, யூதா, கிருபங்கள்
7. மத். 7 : 12
8. பிலிப்பி.—அப். 16 : 12-13
9. (1) யோவான்ஸ்நானகன். (2) அப்போஸ்தலனாகிய யோவான் (3) யோவான் மார்க்கு.
10. யோபு—யோபு 1 · 9
11. எப்தா—நியாயாதி. 11 : 31-40
12. யோனா—யோனா 4 : 1-11

பாப்புவா மிஷனரி
சங். சத்தியா ஜோசப் ஐயரின் கடிதம்

காவுவானி,
வில்விருப்பு.
மேய் 1954,

அன்பான சிநேகிதரே,

ஒரு வாலிபன் ஒரு சிறு காட்டுமிருகத்தைப் பிடிக்கும்படியாக ஓடும் போது மறைவுற்றிருந்த ஒரு குண்டிலே விழவே, அக்குண்டுக்குள்ளிருந்த ஒரு கம்பு அவன் சரீரத்துக்குள் சென்று, அபாய நிலையிலிருந்தான் என்று நான் எழுதின முந்தின கடிதத்தில் வாசிப்பீர்கள். நான் அவனுக்கு செய்யக்கூடிய எல்லா உதவியையும் செய்தேன். அவன் என்னுடைய வீட்டினருகே சில நாட்கள் தங்கினான். இப்பொழுது அவன் பூரண சுகமடைந்திருக்கிறான் என்று மிகவும் சந்தோஷத்தோடு உங்களுக்கு எழுதுகிறேன் மருந்து கொடுத்த 5, 6 நாட்களுக்குள் எழுந்து நடக்க அவனுக்கு சக்தி கிடைத்தது. 3-ம் வாரத்தில் சரீரத்தின் இரண்டு பக்கங்களிலுமுள்ள புண் ஆறிவிட்டது. இப்பொழுது அந்த வாலிபன், இங்கிருந்து 15 மைலுக்கப்பாலுள்ள லாலவா என்னும் கிராமத்தில் தன் இனஜன பந்துக்களைச் சந்தித்து, அங்கே ஒரு படவு செய்யும் வேலையில் அமர்ந்திருக்கிறான் கடவுள் கிருபையால் காயம் அவ்வளவு மோசகரமாயிருக்கவில்லை. பென்சலீன் என்னும் மருந்து ஆச்சரியமான பலனைக்கொடுத்தது. இப்பொழுது இன்னொரு ரோகிக்கு சிகிச்சை செய்து வருகிறேன். அவன் ஒரு காட்டுக்கரடியோடு போராடி தன் இடது தொடையிலும் வலதுகையிலும் காயமடைந்தான். காயங்கள் சுகமாகி வருகிறது. கடவுளின் கிருபையும் வியாதியை எதிர்க்கும் தேக வலுவும், சுகத்துக்கு ஏதுவாயிருக்கிறது.

காவுவானி என்னுமிடத்தில் எங்களுக்கு வேறு ஜோலிகளுமுண்டு போர்டிங் பாடசாலை இன்னும் நடத்தி வருகிறோம். ஆனால் தகுதியான ஆகாரம் கிடைக்கிறது கஷ்டம். ஒரு பையனுக்கு ஒரு கோப்பை சோறு கொடுக்க, 6 அணாவுக்குக் குறையாமல் ஆகும். ஆனால் இதுகொண்டு அவனுக்குத் திருப்தியாகாது. பையன்கள் நல்ல சுகதேகிகளாகையால் போதுமான உணவுவேண்டும் பையன்களுக்குள் பெரியவனாகிய ஜீனோ என்பவன் மிகவும் பெலசாலி பெரிய பெட்டி சாமான்களை எளிதில் தூக்கக்கூடியவன். என்னால் அப்படிப்பட்ட பெட்டிகளை ஒன்று இரண்டு அங்குலங்கள் கூட தூக்கமுடியாது. சுகமும் பெலனும் கடவுள் அளிக்கும் பெரிய ஆசீர்வாதங்களே. ஆனால் சிறங்குகளும் பருக்களும் இப்பாகத்திலுள்ளவர்களின் பெரிய வியாதியாகக் காணப்படுகிறது என்னிடத்திலிருக்கும் மருந்துகள் சீக்கிரம் செலவாகிப்போகிறது.

மார்ச் மாதகாலத்தை நாங்கள் ஆலயக் கட்டடவேலையில் அதிகமாய்ச் செலவிட்டோம். ஆலயத்தின் மேல்கூரை புல்லால் வேயப்பட்டிருந்தது. சரியாய்ச் செய்யாதபடியால் மழைக்காலத்தில் தண்ணீர் ஆலயத்துக்குள் பாய்ந்தது. மேலும் சுவர்களில் பல இடங்களில் பெரிய கீரல்கள் காணப்

பட்டன. ஆகையால் சில வாரங்களாக, அந்த ஆலயத்தில் ஆராதனை நடத்தாமல், ஒரு மாமரத்தின் நிழலில் நடத்தி வந்தோம். இந்த இடத்தை சுத்தமாய் வைக்கும்படியாக ஏற்படுத்தப்பட்ட ஒரு ஸ்திரீ தன் வேலையைச் சரியாய் செய்யக்கூடவில்லை. நான் ஆராதனைக்கு வந்தவர்களிடம், "தற்காலத்துக்கென்று" (ருப்பு வாப்பு) ஒரு ஆலயம் கட்டும்படி ஆலோசனை கூறினேன். அவர்கள் இதையிட்டு அதிகமாய்ப் பேசி தர்க்கம் பண்ணிக்கொண்டேயிருந்தார்கள். பாப்புவா ஜனங்கள் அதிகமாய் பேசுகிறவர்கள். செய்கையோ மிகச் சொற்பம், ஆனால் நேற்று இரவு அவர்கள் எல்லாரும் கூடி ஒரு புது ஆலயத்தைக் கட்டும்படி தீர்மானித்தார்கள். இதைப்பற்றி நான் அடுத்த கடிதத்தில் எழுதுவேன்.

அகிபியியோ என்னும் வாலிபனும் ஆனி றிகோலோ என்னும் அவன் மனைவியும் எங்கள் போர்டிங் பாடசாலைக்கு வர விருப்பங்கொண்டார்கள். அவர்கள் இருவரும் காலேஜ் வகுப்புக்கு ஆதாரமான பரீட்சை எழுதும்படி ஆசைப்படுகிறார்கள். ஆனி றிகோலே இதற்குமுன் இந்த போர்டிங்கில் தங்கிவந்தவளாகையால் எங்களுக்கு அவள் மேல் பிரியமுண்டு. அவர்கள் போர்டிங் மாணவரோடு தங்கமுடியாததாகையால் அவர்கள், பக்கத்தில் ஒரு சிறு வீடு கட்டுகிறார்கள். நாங்கள் தங்கி வரும் வீட்டிலும் ஒழுக்கு அதிகம். பள்ளிக்கூடத்துவேலையும், சேகரத்துவேலையும் செய்யும்போது, வீடு பழுதுபார்க்கும் வேலை நடப்பது கஷ்டம். மழைவருமுன் எங்கள் வீட்டைப் பழுதுபார்க்காவிட்டால் இராக்காலங்களில் அங்கு தூங்குவது மிகவும் கஷ்டமாயிருக்கும்.

ஜூன் மாசம் 2ம் தேதி சேகரத்திலுள்ள எல்லா உக்கன்மாரும், உபாத்திமாரும் உவாலோற் என்னும் கிராமத்தில் கூடி, வருஷாந்த வருமானம், அதை செலவுசெய்யும் விதம் என்னும் விஷயத்தை சிந்திக்கப் போகிறோம். இரண்டு உபாத்திமார் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். ஒரு சுவிசேஷகரையும் ஏற்படுத்த ஒழுங்குபண்ணுகிறோம்.

இக்கடிதம் எழுதும் நான், ஓய்வுநாள். 10 மணி ஆராதனையை முடித்து வீடுவந்து சேர்ந்திருக்கிறோம். காலை 7 மணிக்கு ஓய்வுநாள் ஆராதனை நடந்தது. 3 மணிக்கு இன்னொரு ஆராதனை நடக்கும். அந்த ஆராதனைக்குப் போகுமுன் இக்கடிதத்தை எழுதிமுடிக்க வேண்டும். ஏனென்றால் இக்கடிதத்தைக் கொண்டுவரும் கப்பல் சாயரட்சைக்குமுன் புறப்பட்டுவிடும். ஆகையால் சீக்கிரம் இக்கடிதத்தை முடிக்கிறேன்.

என் மனைவியும் நானும் சுகமாயிருக்கிறோம். நீங்கள் எங்களுக்கு அனுப்பும் உதவிக்காகவும், எங்களுக்காக ஜெபித்து வருகிறதற்காகவும் உங்களுக்கு நன்றி கூறுகிறோம்.

(—தேசோபகாரி).

இப்படிக்கு, உங்கள் அன்புள்ள

உவை. சத்தியா ஜோசப்.

இரக்ஷணிய மனோகரம்

குமாராநுபூதி (தொடர்ச்சி)

12. முப்பற்று எனும் ஆர்கலி மோது அலைவாய்த்
துப்புற்று உழல்கின்ற துரும்பு என் உளம்
ஒப்பற்று உயர் உன்னடி பற்ற அருள்
எப்பற்றும் இலாத சர்வேஸ் வரனே

முப்பற்று எனும்=மனைவி, மக்கள், செல்வம் என்னும் மூன் ஆசையாகிய; ஆர்கலி=கடலில்: மோது=மோதுகின் அலைவாய்=வினை என்னும் அலையில்; துப்பு அற்று=பல அற்று; உழல்கின்ற=அடிபடுகின்ற; துரும்பு என் உள =துரும்பு போன்றது என் உள்ளம்; ஒப்பு அற்று=ஒப்பி லாமல் உயர்=சிறந்த: உன் அடி பற்ற=உன் திருவடிகளை பிடித்துக் கொள்ள; அருள்=கிருபைபுரி; எப்பற்றும்இலாத= எவ்விதத் துணையும் வேண்டாத; சர்வ+ஈஸ்வரனே=யாவ றிற்கும் இறைவனே.

13. உன் ஆர் அருள் ஒன்று அடியேற்கு உளதேல்
என்றால் அடையாப் பயன் யாது கொலாம்
இன்னே திருவுள்ளம் இரங்குதியால்
பொன்னாடு தொழும் குண பூதரனே

உன் ஆர் அருள்=உன் நிறைந்த அருளுள்; ஒன்று=ஒரு சிறி அடியேற்கு உளதேல்=அடியேனுக்குக் கிடைத்தால்; என்றா அடையாப் பயன்=என்றால் அடையக்கூடாத பலன்; யா கொலாம்=ஏதாவது உண்டோ இன்னே=இப்பொழுதே இரங்குதி=இரங்கு; ஆல்-அசை; பொன் நாடு=விண்நாட் தேவதூதர்; தொழும்=வணங்குகின்ற; குண பூதரனே= குணக்குன்றே.

14. மூந்து ஆரண நூல் நெறி முற்றும் இகந்து
அந்தோ கொடும் பாதகன் ஆயினன் யான்
நந்தா உன் அருள் பிரசாத நலம்
தந்து ஆதரி ஏசு தயாபரனே

மூந்து ஆரண நூல் நெறி=பழமையான வேத நூலில் கூறு வழிகளை; முற்றும் இகந்து=முழுதும் கைவிட்டு; அந்தோ= ஐயோ; கொடும் பாதகன் ஆயினன் யான்=நான் கொடிய பா கன் ஆனேன்; நந்தா=அழியாத; உன் அருள் பிரசாத நலம் =உன் நல் அருளாகிய திவ்ய அமுதத்தை; தந்தாதரி=தந்து+ ஆதரி.

15. நன்று ஏதுமிலேன் உயிர் நாழறு நாள்
இன்றோ அலது எப்பொழுதோ அறியேன்
என்றோ கருணைக்கு இலக்கு ஆகிடுவேன்
பொன்றா நெறி காட்டிய புண்ணியனே

உயிர் நாமறு நாள்=உயிர் போகும் நாள், என்றோ கருணைக்கு இலக்கு ஆகிடுவேன்=உன் கருணைக்கு நான் பாத்திரம் ஆவது என்றோ. பொன்று நெறி=அழியாத வழி.

16 சிந்தா குலமும் உகு செம்புனலும்
ஐந்தாகிய காயமும் ஆக்கைபடும்
சந்தாபமும் என் உனக்குத் தமியேன்
வெந்தீவினைகாண் விபுதாதிபனே.

சிந்தாகுலமும்=மனக்கவலையும்; உகு=சிலுவையில் சிந்திய; செம்புனலும்=செந்நீரும்=இரத்தமும்; ஐந்தாகிய காயமும்; ஆக்கைபடும் சந்தாபமும்=உடல் அடையும் வேதனையும்; என் உனக்கு=உனக்கு என் உண்டாயின தமியேன் வெந்தீவினை காண்=(இவற்றிற்குக் காரணம்) எளியேன் செய்த கொடிய பாவந்தான் விபுத ஆதிபனே தேவர்களுக்குத் தலைவனே.

17. ஆண்டு ஆயிரம் ஆயிரம் ஆயுள் படைத்து
ஈண்டு ஓர் அரசாய் உலகு ஆளினும் என்
மீண்டு ஆர் உயிர் பெற்று உனை மேவிலரேல்
மாண்டார் உயிர் ஈந்த மகா குருவே

ஆண்டு ஆயிரம் ஆயிரம்=ஆயிரக்கணக்கான வருஷங்களை; ஆயுள் படைத்து=ஆயுளாகப்பெற்று; ஈண்டு=இவ்வுலகில் ஓர் அரசாய் தனி அரசாக; உலகு=உலகம் முழுவதையும்; ஆளினும்=ஆண்டாலும்; மீண்டு ஆர் உயிர் பெற்று=(மரித்த பின்) மீண்டும் நித்ய ஜீவன் பெற்று. உனை மேவிலரேல்=உன்னை அடையாவிட்டால்; என்=என்ன பயன், மாண்டார் =இறந்தவருக்கு.

18 அல் வந்த மனத்தினன் ஆயினும் உன்
சொல் வந்து தெருட்டியது இத்துணை; நீ
நில் வந்தனம் ஐய நினைந்து உன் அருள்
செல்வந்தனை ஈதி ஜெகத் குருவே.

அல்=அஞ்ஞான இருள்; வந்த=வந்து மூடின: மனத்தினன் =மனத்தையுடையவன் நான; உன் சொல் வந்து=உன் வார்த்தை வந்து; இத்துணை=இவ்வளவாக; தெருட்டியது= எனக்கு அறிவு கொடுத்தது, நீ நில்=துணையாக உன் சொல் லோடு நீயும் என்னண்டை நிற்குமாறு வேண்டிக்கொள்கிறேன். வந்தனம் ஐய=இறைவா உனக்கு ஸ்தோத்திரம்; நினைந்து =என்னையும் உன் அடியாருள் ஒருவனாக எண்ணி; உன் அருள் செல்வம் தனை=உன் அருட்செல்வத்தை: ஈதி=தருவாயாக.

கி. மு. சங்கப் பொருட்கள்.
நவம்பர்-1954

எசேக்கியேலின் செய்தி

நவம்பர்

1. எசேக்கியேல் தீர்க்கதரிசியின் அழைப்பும், ஊழியமும் எசே. 1-3
2. எருசலேமின் அழிவை முன் அறிவித்தல் எசேக். 4 : 24,
3. எருசலேமின் அழிவு எசேக். 33 : 21
4. ஆவிக்குறிய எழுப்புதல் எலும்புகளின் தரிசனம் எசேக். 37
5. யெகோவாவை அடிப்படையாகக் கொண்ட ஓர் புதிய சமுதாயம் எசே 40-48
6. புதிய இருதயம் எசே 11 : 19. 36 : 25-28
7. கடவுளின் பிரசன்னம் திரும்பவும் அருளப்படுவதைப்பற்றிய முன்னுரை எசே. 44 : 4

தற்காலத்துக்கு புதிய ஏற்பாட்டின் செய்தி-அன்பு-வளர்ச்சி-

8. உன்னதமான ஈவு 1 கொரி. 13 : 1-3
9. அன்பின் தத்துவம் I கொரி 13 : 4-7
10. அன்பு நித்தியமானது I கொரி 13 : 8-13
11. வளர்ச்சியின் ரகசியம் மத். 6 : 44-38
12. விசுவாசத்தில் வளரு II தெச 1 : 1-10
13. வளர்ச்சிக்கு நிபந்தனை I பேதுரு 2 : 1-10
14. கிறிஸ்துவின் மாதிரி லூக். 2: 39-49

தற்காலத்துக்கு புதிய ஏற்பாட்டின் செய்தி-சந்தோஷமாயிரு-ஜெபி

15. என்னுடைய சந்தோஷம் யோவான் 15 : 1-11
16. சந்தோஷத்தின் மூலம் உற்சாகம் எபிரே. 12 : 1-3
17. எல்லாவற்றையும் சந்தோஷமாகப் பாவி யாக். 1 : 1-8
18. சந்தோஷமாயிருங்கள் பிலிப். 2 : 12-18
19. ஜெயங்கொள்ளுகிறவன் வெளி 7: 9-17
20. கிரீடம் II தீமோத். 6, 10-20
21. ஜெயம் பெறு எபேசி. 6: 10-20

தற்காலத்துக்கு புதிய ஏற்பாட்டின் செய்தி-ஊழியம்-கிறிஸ்துவின் சிலுவை

22. ஊழியம் முக்கியமானது மத். 9 : 32-38
23. கிறிஸ்துவின் மாதிரி யோவான் 5 : 17-20
24. ஊழியமும் தியாகமும் லூக். 9 : 23-27
25. சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து I கொரி. 1 : 17-31
26. கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் I கொரி. 15 : 1-11

27. சிலுவையின் மகிமை கலாத் 6 : 6-16
28. கிறிஸ்து எல்லாருக்காகவும் மரணமடைந்தார்
II கொரி. 5 : 11

கிறிஸ்துவின் வருகை-பழைய ஏற்பாடே மேசியாவின் வருகைக்கு அஸ்திபாரம்

29. நம்பிக்கை, வாக்குத்தத்தத்தின் செய்தி ஆதி. 3 : 1-24
30 நம்முடைய தீவிரமான நோக்கம் ஆதி. 12 : 1-9

வேத வினாக்கள்

(குறிப்பு :—மாதம் தோறும் வேத அறிவை விருத்தி செய்ய உதவும் 12 கேள்விகளும் அதற்குரிய விடைகளும் பிரசுரமாகும். நண்பர்கள் வேதத்திலுள்ள விவரங்களில் தேர்ச்சியடைய இவை உதவும் என நம்புகிறோம் ப—ர்)

(கனம் செல்வம் டேயிலர் அம்மாள், பசுமலை)

1. எருசலேமுக்கு ஐந்து மைலுக்கு தெற்கே இருக்கும் முக்கியமான ஊர் எது?
2. " நீயே அந்தமனிதன் " என்று யார் சொன்னது?
3. எருசலேமின் சுவர் கட்டப்படுவதைக் குறித்து எந்த புஸ்தகத்தில் வாசிக்கிறோம்?
4. " ஈரோப் " என்னும் பதம் எந்த இரண்டு முக்கிய சம்பவங்களோடு சம்பந்தப்பட்டிருக்கிறது?
5. மேற்கோள் வாக்கியத்தை பூர்த்திசெய் " ஓ தாகமாய் இருக்கிறவர்களே "
6. புதிய ஏற்பாட்டில் உள்ள எந்த புஸ்தகத்தை இயேசுவின் சகோதரன் எழுதியுள்ளார்?
7. பொற்பிரமாணத்தை திட்டமாகக் கூறு
8 ஐரோப்பா கண்டத்தில் முதல் முதல் சுவிசேஷத்தை கேட்ட பட்டணம் எது?
9. புதிய ஏற்பாட்டின் மூன்று முக்கியமான யோவான்கள் யார்?
10. சாத்தான் எந்த ஆஸ்திக்காரனைப் பார்த்து " விருதாவாகவா தேவனுக்கு பயந்து நடக்கிறான் " என்று கேட்கிறான்?

தன் ஆணையின் பொருட்டு மகளை பலிசெலுத்தின நியாயாதிபதி யார்?

எந்த தீர்க்கதரிசியின் சரிதை ஆமணக்கோடு சம்மந்தப்பட்டுள்ளது?

விளம்பரம்

ஓய்வு நாள் பாடசாலைகளுக்கு அறிவிப்பு

அகில லோக ஓய்வு நாள் பாடசாலை தினம் 1954 நவம்பர் 7ம் தேதி.

இத்தினம் நம் தேச முழுவதிலும் உள்ள அநேக ஓய்வுநாட் பள்ளிக்கூடங்களால் ஓர் விண்ணப்ப நாளாகவும் ஸ்தோத்திர தினமாகவும் அனுசரிக்கப்படும் இத்தினத்தின் உபயோகத்திற்கென்று ஓர் கவர்ச்சிகரமான ஆராதனைமுறைமை தயாராகி வருகின்றது வங்காளத்தைச் சேர்ந்த கலிசாரன் பானர்ஜியின் ஜீவிய சரித்திரம் சிறு நாடக ரூபத்தில் அத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. அவர் ஓர் சிறந்த கிறிஸ்தவர். கல்வித்துறையில் நன்கு உழைத்தவர். ஓர் தேச பக்தர்.

ஆராதனை முறைமையின் ஓர் நகல் மட்டும் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம் அதற்கு மேலும் நகல்கள் வேண்டுவோர் நகல் ஒன்றிற்கு 6 அணா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் கலிசாரன் பானர்ஜியின் உருவப் படம் அச்சடித்துள்ள 32 முத்திரைகள் அடங்கிய ஆல்பம் ஒன்றின் விலை ரூ. 2 நாடகத்தை நீங்கள் வெற்றியுடன் நடத்த அநேக ஒத்திகைகள் அவசியமாதலால் உடனடியாக கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்

இத்தினத்தைப்பற்றி அநேகருக்கறிவித்து, உங்கள் சபையிலும் அதனைக்கொண்டாட முயற்சிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

V. M. KOSHY,
Administrative Secretary,
India Sunday School Union,
COONOOR,
NILGIRIS.

முக்கிய அறிவிப்பு

போனமாத சஞ்சிகையில் வேதாகமத்தைப் பாதி விலைக்குக் கொடுக்கும்படி உதவிய சகாயநிதி இனிக்கிடையாதென்ற விளம்பரம் கொடுத்தோம்.

ஆனால் இது வெளியான பின்பு சந்தோஷமான செய்தி கிடைத்தது. அதாவது வேதாகமம் பாதிக்கிரயத்திற்கு கொடுக்கலாம் என்ற நற்செய்தியை அமெரிக்கன் ஹோம் பைபிள் சங்கத்தார் தங்கள் பிரதிநிதியான கனம் உவீரிங்கா பண்டிதர் மூலம தெரிவித்திருக்கின்றனர்.

அப்பா ஸ்ரீநிவாசன்,
மானேஜர்.

Lenox Press, Pasumalai, 1—10—1954. 429 C.